# டிரம்பைக் கொல்ல திட்டம் தீட்டிய ஈரான்: அம்பலப்படுத்தியது அமெரிக்கா

வாஷிங்டன், நவ. 9–

அமெரிக்கா அதிபர் தேர்தலுக்கு முன்னதாக, டொனால்டு டிரம்பை கொலை செய்ய திட்டமிட்டதாக கூறி ஈரானின் துணை ராணுவ குழு உறுப்பினர் ஒருவர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் கமலா ஹாரிசை தோற்கடித்து, 2வது முறையாக அதிபராக டிரம்ப் வெற்றி பெற்று 47வது அதிபராக தேர்வாகி உள்ளார். பிரச்சார களத்தில் கடும் நெருக்கடியை சந்தித்த தருணத்தில் டிரம்ப் மீது துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. ஜூலை 13ம் தேதி பென்சில்வேனியா மாகாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த பிரச்சாரத்தில் நிகழ்ந்த இந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

மேடையில் பேசிக் கொண்டு இருந்த போது பறந்து வந்த தோட்டா, டிரம்ப் காதில் மேல்பகுதியை உரசிச் செல்ல ஒரு கணம் ஆதரவாளர்கள் அதிர்ந்து போனார்கள். அதன் பின்னர் புளோரிடா மாகாணத்தில் கோல்ப் மைதான கிளப்பில் டிரம்ப் விளையாடிக் கொண்டிருந்த போது, மர்ம நபர் துப்பாக்கிச்சூடு நடத்தினார். அப்போதும் டிரம்ப் உயிர் தப்பினார். இந்த சம்பவம் அமெரிக்க வாக்காளர்கள் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு முன்னதாக டொனால்டு டிரம்பை கொலை செய்ய திட்டமிட்டதாக கூறி, ஈரானின் துணை ராணுவ குழு உறுப்பினர் ஒருவர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்கா நீதித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

ஈரான் துணை ராணுவ குழுவின் ஒரு உறுப்பினர் டிரம்பை கண்காணித்து, கொல்ல முயற்சி செய்துள்ளார். ஈரானை வெளிப்படையாக விமர்சிக்கும் ஒரு அமெரிக்க பத்திரிகையாளரைக் கொல்ல முயற்சி செய்துள்ளனர். இது குறித்து இருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஈரானுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அமெரிக்கா மக்களையும், அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பையும் ஆபத்தில் ஆழ்ந்த முயற்சி நடக்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நீண்ட கால எதிரியாக இருந்து வரும் ஈரான், கடந்த முறை டிரம்ப் ஆட்சியின் போது பல நெருக்கடிகளை சந்தித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# சொந்த கிராமத்தில் அனைவருக்கும் இலவசக் கல்வி: ரூ.100 கோடி நிதியுதவி அளித்த தொழிலதிபர்

ஆமதாபாத், நவ. 9–

குஜராத்தில் உள்ள தனது சொந்த கிராமத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கல்வி வழங்குவதற்காக, தொழிலதிபர் மகேந்திரா மேக் படேல் 100 கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளார்.

குஜராத் மாநிலம் நிஸ்ரயா கிராமத்தில் பிறந்தவர் மகேந்திரா மேக் படேல். இவருக்கு வயது 86. இவர் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவில் முதுகலைப் பட்டம் பெற்று அமெரிக்காவில் தொழில் நிறுவனம் நடத்தி வருகிறார். இவர் தனது சொந்த கிராமத்தில் உள்ள அனைத்து குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும் என விரும்பி அதற்காக ரூ.100 கோடி நிதியுதவி அளித்துள்ளார்.

நிஸ்ரயா கிராமத்தில், அதிநவீன உயர்நிலைப் பள்ளியைக் கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறார். அதுமட்டுமின்றி, இந்த பள்ளியில் சிறந்த ஆசிரியர்கள் மற்றும் வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என மேக் படேல் விரும்புகிறார். தற்போது கன்சல்ட் ஆன்ட்ஸ் கார்ப்பரேஷனின் தலைவராக பணியாற்றி வரும் இவர் கூறுகையில், 'நான் இந்தியன் வங்கியில் 75 கோடி ரூபாய் பிக்சட் டெபாசிட் செய்து இருந்தேன். தற்போது அந்த பணத்தை நிஸ்ரயா கிராமத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்த முடிவு செய்துள்ளேன்' என்றார்

மேலும், அவர் கூறுகையில், ' நிஸ்ரயா கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி இல்லை. குழந்தைகள் மற்ற கிராமங்கள் அல்லது நகரங்களுக்குச் செல்ல வேண்டும். குழந்தைகள் அனைவரும் உயர்கல்வி பெற பள்ளி கட்டி கொடுப்பது எனது கனவு. மாணவர்கள் இலவசமாக கல்வி கற்க வேண்டும் என்றார்.

கடந்த 6 மாதங்களில் மட்டும், நிஸ்ரயா கிராமத்தை சேர்ந்த 70 ஏழை மாணவர்களுக்கு ரூ.30 லட்சம் வழங்கினார். அவர்களின் உயர்கல்வி பி.ஏ., பிகாம் மற்றும் பிசிஏ என பட்டப்படிப்புகளுக்கு மேக் படேல் உதவி உள்ளார். தொடர்ந்து அவர் செய்த உதவிகளால், அந்த கிராமம் நல்ல வடிகால் அமைப்பு, சூரிய சக்தியால் இயங்கும் தெருவிளக்குகள், சி.சி.டி.வி., கேமராக்கள், ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறைகள் என வளர்ச்சி அடைந்துள்ளது.

மேக் படேலுக்கு கிராம மக்கள் மத்தியில் நல்ல பெயர் உள்ளது. இவரை அந்த கிராம மக்கள் கடவுள் போல் பார்க்கிறார்கள். உயர்ந்த நிலைக்குச் சென்றாலும் தன் சொந்த கிராமத்தை மறக்காமல், ரூ.100 கோடி நிதியுதவி அளித்த மேக் படேலை பல்வேறு தரப்பினரும் பாராட்டி வருகின்றனர்.

# கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள்; பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒப்புதல்

ஒட்டாவா, நவ. 9–

கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் இருக்கிறார்கள் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை தொடர்பாக இந்தியா மீது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த குற்றச்சாட்டை தொடர்ந்து, இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு உள்ளது. கனடா அரசு, இந்தியா மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துகிறது என மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது.

'காலிஸ்தானியர்களுக்கு ஆதரவாக கனடா அரசு செயல்பட்டு வருகிறது. இந்திய தூதரக அதிகாரிகளுக்கு காலிஸ்தானியர்கள் மிரட்டல் விடுப்பதை கனடா அரசு வேடிக்கை பார்க்கிறது' என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் குற்றம் சாட்டி இருந்தார்.

இந்நிலையில், ஒட்டாவாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில், ஜஸ்டின் ட்ரூடோ பேசுகையில்,

கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் பலர் உள்ளனர். ஆனால் அவர்கள் ஒட்டு மொத்த சீக்கிய சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. கனடாவில் மோடி அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் உள்ளனர்.

ஆனால் அவர்கள் ஒட்டுமொத்த இந்து கனேடியர்களை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. இவ்வாறு ஜஸ்டின் ட்ரூடோ பேசினார். கனடாவில் காலிஸ்தானி ஆதரவாளர்கள் இருப்பதை ட்ரூடோ ஒப்புக்கொண்டார். கனடா அரசாங்கம் காலிஸ்தானியர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறது என்ற இந்தியாவின் குற்றச்சாட்டை இது உறுதிப்படுத்துவதாக உள்ளது.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் தங்க மணி கண்டெடுப்பு

விருதுநகர், நவ. 9–

வெம்பக்கோட்டையில் நடைபெறும் அகழாய்வில் தங்கத்தினால் ஆன மணி கண்டெடுக்கப்பட்டது.

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளம் பகுதியில் இரண்டு கட்ட அகழாய்வு பணிகள் நடந்து முடிந்துள்ளன. இதில் சுடுமண்ணாலான பகடைக்காய், தக்களி, ஆட்டக்காய்கள், முத்துமணிகள், சங்கு வளையல்கள், பெண் உருவம், காளை உருவம், சுடுமண்ணால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருள்கள், பதக்கம், குடுவை, புகைக்கும் குழாய், கோடரி, பழங்கால பாசி மணிகள் உள்ளிட்ட 7,900க்கும் மேற்பட்ட பழமையான தொல்பொருட்கள் கிடைத்தன.

இவை அதே பகுதியில் கண்காட்சி அமைக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. வெம்பக்கோட்டையில் தற்போது 3ம் கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், வெம்பக் கோட்டை அகழாய்வில் தங்கத்தினால் ஆன மணி கண்டெடுக்கப்பட்டு உள்ளது. அகழாய்வின்போது, 1.28 மீட்டர் ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள இந்த தங்கத்தினால் ஆன மணி, 0.15 கிராம் எடை கொண்டதாக உள்ளது. அகழாய்வு பணியில் தொடர்ந்து பழங்கால பொருட்கள் கிடைத்து வருவதாக தொல்லியல்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.


## பெயர் மாற்றம்

Old Given Name: ARUN KISHANLAL Old Surname:- AGARWAL, தந்தை பெயர்: AGARWAL KISANLAL NAGARMAL, பிறந்த தேதி: 22.05.1968, ப்ளாட் நெ.602, டவர் 17, North Town Apartment, No.4,5,6,7 Stephenson Road, பெரம்பூர் பார்ரக்ஸ் ரோடு, சென்னை–600 012, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New GIVEN NAME:-ARUN KISHANLAL new SURNAME:-AGRAWAL** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: ARUN KISHANLAL
Old Surname:- AGARWAL

## பெயர் மாற்றம்

FROSENEINA MOHAMED ABUBACKKAR, தந்தை பெயர்: Mohamed AbuBakkar, பிறந்த தேதி: 26.04.1965, நெ.5, 1வது மாடி, தந்தை பெரியார் 3வது தெரு, சோழவரம் நகர், குரோம்பேட்டை, சென்னை – 600044. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **BROSH NAINAR MOHAMED ABUBAKKAR** என்று அழைக்கப்படுகிறேன்.

FROSENEINA MOHAMED ABUBACKKAR

## பெயர் மாற்றம்

NAVEEN KUMAR. M V S , தந்தை பெயர்: M V SELVAM, பிறந்த தேதி: 31.03.1994, ப.நெ.16/2, பு.நெ.8, கோவர்தன் தாஸ் தெரு, பெரம்பூர், சென்னை – 600 011. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NAVEEN KUMAR** என்று அழைக்கப்படுகிறேன்.

NAVEEN KUMAR. M V S

## பெயர் மாற்றம்

NANDKISHORE KANUNGO, கணவர் பெயர்: MANISH JITANI, பிறந்த தேதி: 21/03/1981, (பிறந்த இடம்: JALNA - MAHARASHTRA) ANKUR VANI FLAT NO.25, 71/104, அஸ்தபுஜம் ரோடு, புரசைவாக்கம், சென்னை–600 007. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ARCHANA JITANI** என்று அழைக்கப்படுகிறேன்.

MANISH JITANI ARCHANA

## பெயர் மாற்றம்

SIDHIDEVI RAMU, தந்தை பெயர்: EKAMBARAM, பிறந்த தேதி: 22/05/1969, நெ.166, 1வது மெயின் ரோடு, சுதர்சன் நகர், மாடம்பாக்கம், சென்னை – 600126. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SIDHIDEVI EKAMBARAM** என்று அழைக்கப்படுகிறேன்.

SIDHIDEVI RAMU

## பெயர் மாற்றம்

SHAHEELA SYED ALI, கணவர் பெயர்: Syed Ali Sulaiman Peer Mohamed, பிறந்த தேதி: 25/05/1977, பு.நெ.31, ப.நெ.15, வடுகு தெரு, மயிலாப்பூர், சென்னை – 600004. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SHAHEELA ALI** என்று அழைக்கப்படுகிறேன்.

SHAHEELA SYED ALI


# கொலை முயற்சி வழக்கில் 5 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த குற்றவாளி கைது

சென்னை, நவ. 9–

சென்னை கோயம்பேடு பகுதியில் கொலை முயற்சி வழக்கில் 5 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த குற்றவாளி கைது செய்யப்பட்டார்.

2019ம் ஆண்டு, சென்னை, அண்ணா நகரில் வசித்து வந்த அன்பு (20) என்பவர் கோயம்பேடு ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் உள்ள தங்கும் விடுதியில் மேற்பார்வையாளராக பணியாற்றி வந்தார். 18.02.2019 அன்று, மேற்படி விடுதியில் தங்கியிருந்த ஜீவா என்பவர் தனது சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.4 ஆயிரத்தை யாரோ எடுத்துவிட்டதாக அன்புவிடம் கூறியபோது, உடனே, அன்பு சிசிடிவி கேமரா காட்சிகளை பார்த்தபோது, அதில் அதே விடுதியில் தங்கியிருந்த காரைக்குடியைச் சேர்ந்த அழகுராஜா என்பவர், ஜீவாவின் சட்டைப் பையில் இருந்த பணத்தை திருடியது தெரிந்ததின்பேரில், அன்பு இவ்விஷயத்தை ஜீவாவிடம் கூறினார்.

இதனால் ஆத்திரமடைந்த அழகுராஜா, மறுநாள் இரவு, விடுதியில் இருந்த அன்புவை தகாத வார்த்தைகளால் பேசி தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் அன்புவின் தலையில் தாக்கிவிட்டு தப்பிச் சென்றார். இரத்தக்காயமடைந்த அன்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மேற்படி சம்பவம் குறித்து கொடுத்த புகார் மீது கோயம்பேடு காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

கோயம்பேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி வழக்கில் சுமார் 5 ஆண்டுகள் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருந்து வந்த எதிரி அழகுராஜா (34) என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி அழகுராஜா, விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் இயற்கை சந்தைக்கு வருகை தர பொதுமக்களுக்கு தமிழக அரசு அழைப்பு

சென்னை,நவ.9–

இயற்கை சந்தைக்கு பொதுமக்கள் வருகை தந்து, மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை வாங்கி மகிழ வேண்டும் என தமிழக அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

"தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகர பகுதியில் விற்பனை செய்ய ஏதுவாக பல்வேறு புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**நுங்கம்பாக்கம் தெரசா வளாகத்தில்**

அதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாதமும் வார இறுதி நாட்களான சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் இயற்கை சந்தை நடைபெற்று வருகிறது. இந்த இயற்கை சந்தையில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக்குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் இயற்கை சார்ந்த பொருட்களான பாரம்பரிய அரிசிகள், சிறுதானிய மற்றும் சிறுதானிய மதிப்பு கூட்டு பொருட்கள், காய்கறிகள் மற்றும் கீரைகள், பனை ஓலை பொருட்கள் போன்ற இயற்கையுடன் சார்ந்த பொருட்கள் கிடைக்கும். மேலும் இயற்கை சந்தையில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் தயார் செய்யப்படும் பல்சுவை உணவுப் பொருட்கள் கிடைக்கும். எனவே பொதுமக்கள் அனைவரும் இயற்கை சந்தைக்கு வருகை தந்து, மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை வாங்கி மகிழ அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அடுத்த திருவேங்கடபுரம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ பொன்னியம்மன் ஆலயத்தில் கந்த சஷ்டியை முன்னிட்டு ஸ்ரீ முருக பெருமானுக்கு 9ம் ஆண்டு திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு விருந்து நடைபெற்றது. உள்பிரகார சுவாமி வீதியுலா நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாட்டினை விழா குழு நிர்வாகிகள்,உபயதாரர்கள ராஜா,தசரத நாயுடு மற்றும் ஆலய அர்ச்சகர் சசிகுமார் சர்மா மற்றும் திருவேங்கடபுர கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.


## பெயர் மாற்றம்

KITTU SONI, தந்தை பெயர்: PAWAN KUMAR MOSHUN, பிறந்த தேதி: 02/05/2006, ஆதார் விலாசம்: நெ.68, பாலகிருஷ்ணா தெரு, வியாசர்பாடி, சென்னை – 600039. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **KITTU SONI P** என்று அழைக்கப்படுகிறேன்.

KITTU SONI

**BEFORE THE HON' BLE III ASST. CITY CIVIL COURT AT CHENNAI**
**O.S. No. 1541 of 2024**

V. Krishnamurthy, S/o. Velu,
No. 13, 6th Block,
Kaviarasu Kannathasan Street,
Kodungaiyur, Chennai- 600 118.
... Plaintiff

Vs.

Shukoor Ahmed,
S/o. D.K. Hussain Sahib,
Temporarily Residing at
No. 54, Ground Floor,
Triplicane High Road,
Chennai- 600 005 & 6 others
...Defendant No.2

Please take notice that the above said O.S. 1541/2024 on the file of the Hon'ble III Asst. City Civil Court at Chennai filed by the V. Krishnamurthy against Kareem Ahmed & 6 others for permanent injunction. Taking notice against Shukoor Ahmed. The above case came upon 06.11.2024 before the Hon'ble Til Asst. City Civil Court and after hearing the case the Hon'ble Court was pleased to adjourn the case on 17.12.2024 and ordered Paper Publication in Chennai region for your personal appearance.

Kindly appear before the Hon'ble III Asst. City Civil Court at Chennai in O.S. 1541/2024 on 17.12.2024 at 10,15 am. for your personal appearance failing which the matter will be decided in your absence.

**D. GOPAL PANDI**
Counsel for Plaintiff

## அபான் ஆப்ஷோர் லிமிடெட்

aban®

பதிவு அலுவலகம்: ''ஜன்பிரியா கிரஸ்ட்' 113, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை–600 008, இந்தியா.
CIN:L01119TN1986PLC013473 Phone: (91) (44) 49060606 Fax: (91) (44) 28195527.
e-mail : abanoffshore@aban.com website : abanoffshore.com

**30 செப்டம்பர் 2024–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ரூ. மில்லியனில்)

| வ எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 30.09.2024 (தணிக்கை யாகாதது) | முடிந்த ஆண்டு 31.03.2024 (தணிக்கை யானது) | முடிந்த காலாண்டு 30.09.2023 (தணிக்கை யாகாதது) |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 1,152.00 | 3,996.65 | 633.36 |
| 2. | காலத்திற்கான நஷ்டம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | (1,100.55) | (12,955.71) | (3,161.93) |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நஷ்டம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (1,100.55) | (12,955.71) | (3,161.93) |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர நஷ்டம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (1,152.29) | (13,162.64) | (3,177.11) |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கி உள்ளது) | (2,323.94) | (15,715.47) | (5,952.76) |
| 6. | சம பங்குமூலதனம் (ஒவ்வொன்றும் முக மதிப்பு ரூ.2/– முழுவதும் செலுத்தப்பட்டது) | 116.73 | 116.73 | 116.73 |
| 7. | ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கையான நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளபடி | - | (2,09,150.18) | - |
| 8. | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முக மதிப்பு ரூ.2/–) (வருடாந்திரமல்ல) (ரூபாயில்) | | | |
| | (ஏ) அடிப்படை | (19.76) | (225.81) | (54.44) |
| | (பி) பலமிழந்தது | (19.76) | (225.81) | (54.44) |

குறிப்புகள்:

(i) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com and www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.abanoffshore.comல் உள்ளது.

(ii) ஏப்ரல் 1, 2016 முதல் இந்திய கணக்கியல் தரநிலைகளை (இண்ட் ஏஎஸ்) கம்பெனி ஏற்றுக்கொண்டுள்ளது மற்றும் மேற்சொன்ன தர நிலைகளில் அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரம் மற்றும் அளவீட்டு கொள்கைகளின்படி இந்த நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

(iii) **தனியான நிதிநிலை முடிவுகள் கீழ்க்கண்டவாறு உள்ளது**

| வ எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 30.09.2024 (தணிக்கை யாகாதது) | முடிந்த ஆண்டு 31.03.2024 (தணிக்கை யானது) | முடிந்த காலாண்டு 30.09.2023 (தணிக்கை யாகாதது) |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் வருமானம் | 392.84 | 901.99 | 172.03 |
| 2. | வரிக்கு முன் லாபம் | 1635.28 | (2,792.16) | (546.59) |
| 3. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் | 1,640.59 | (2,830.18) | (546.57) |

குழு உத்தரவுப்படி

இடம்: சென்னை
தேதி : நவம்பர் 8, 2024

சி பி கோபாலகிருஷ்ணன்
துணை நிர்வாக இயக்குனர் & தலைமை நிதி அதிகாரி


# காசா போரில் பலியானவர்களில் 70% பெண்கள், குழந்தைகள்: ஐ.நா. அறிக்கையில் அதிர்ச்சி தகவல்

ஜெனீவா, நவ. 9–

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் இன்னமும் ஓயவில்லை. எங்கு நோக்கிலும் குண்டு சத்தம் ஒலித்துக் கொண்டே இருக்க, போரின் விளைவுகள் குறித்து உலக நாடுகள் அதீத கவலை தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், காஸாவில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில் பலியானவர்களின் எண்ணிக்கை 43,058 ஆக உயர்ந்துள்ளதாக பாலஸ்தீனம் அறிவித்துள்ளது. 1 லட்சத்து 2,684 பாலஸ்தீன மக்கள் காயம் அடைந்துள்ளனர்.

இதுகுறித்து ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:– காசாவில் அரங்கேறி வரும் தாக்குதல் மனிதநேயத்தை மீறிய நடவடிக்கை. கொல்லப்பட்டவர்களில் 80 சதவீதம் பேர் குடியிருப்புகளில், வீடுகளில் வசித்து வந்தவர்கள். போரில் கொல்லப்பட்டவர்களில் கிட்டத்தட்ட 70 சதவீதம் பேர் பெண்கள், குழந்தைகள் என தெரிவித்துள்ளது.


## தமிழ்நாடு அரசு
## பொதுப்பணித்துறை

கட்டட அமைப்பு – ஒப்பந்த முறை : மொத்தத் தொகை (இரு உறை முறை)

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 16/VLR-CLE/2024-2025 நாள்: 06.11.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் வேலூர் பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால், அட்டவணையில் காணும் பணிக்கு 04.12.2024 அன்று இறுதி நாளாக கொண்டு அலுவலக நேரப்படி பிற்பகல் 3.00 மணி வரையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவுசெய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரு உறை முறையில் வரவேற்கப்படுகின்றன.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதிகாண் படிவம் என குறிக்கப்பட்ட உறை (உறை எண்: 1) மட்டும் 04.12.2024 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும். https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 14.11.2024 முதல் 04.12.2024 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி. உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 24 வகுப்பறைகள் கட்டடம் கட்டும் பணி | 518.90 | ரூ. 2,70,000 | 12 மாதங்கள் |

ஒப்பந்ததாரர் தகுதி : வகுப்பு II மற்றும் அதற்கு மேல்.

முன்வைப்புத் தொகைகளை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். விலை வீத மாறுதல் (Price Adjustment Clause) மேற்காணும் பணிக்கு பொருந்தும். முன் தகுதி பெறும் ஒப்பந்ததாரர்களுக்கு விலை விவர ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் தனியே தெரிவிக்கப்படும்.

இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், வேலூர் - 1

செ.ம.தொ.இ/4827/ஒப்பந்தப்புள்ளி/2024

## ஆர்க்கியன் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

CIN: L24298TN2009PLC072270
பதிவு அலுவலகம்: எண்.2, வடக்கு கிரசண்ட் ரோடு, தி. நகர், சென்னை 600 017

**30 செப்டம்பர், 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரைஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ரூ. லட்சத்தில், ஒரு பங்குத் தரவு தவிர)

| வ. எண். | விவரங்கள் | தனியானது | | | | | | ஒருங்கிணைந்தது | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு செப்டம்பர் 30, 2024 தணிக்கை செய்யாதது | முடிந்த காலாண்டு ஜூன் 30, 2024 தணிக்கை செய்யாதது | முடிந்த காலாண்டு செப்டம்பர் 30, 2023 தணிக்கை செய்யாதது | முடிந்த அரைஆண்டு செப்டம்பர் 30, 2024 தணிக்கை செய்யாதது | முடிந்த அரைஆண்டு செப்டம்பர் 30, 2023 தணிக்கை செய்யாதது | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2024 தணிக்கை யானது | முடிந்த காலாண்டு செப்டம்பர் 30, 2024 தணிக்கை செய்யாதது | முடிந்த காலாண்டு ஜூன் 30, 2024 தணிக்கை செய்யாதது | முடிந்த காலாண்டு செப்டம்பர் 30, 2023 தணிக்கை செய்யாதது | முடிந்த அரைஆண்டு செப்டம்பர் 30, 2024 தணிக்கை செய்யாதது | முடிந்த அரைஆண்டு செப்டம்பர் 30, 2023 தணிக்கை செய்யாதது | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2024 தணிக்கை யானது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 25,205.01 | 22,339.66 | 30,204.38 | 47,544.67 | 65,634.15 | 1,37,628.25 | 25,137.60 | 22,239.47 | 30,165.65 | 47,377.07 | 65,567.98 | 1,37,341.32 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 6,978.15 | 6,510.22 | 8,771.18 | 13,488.37 | 21,313.63 | 43,136.32 | 6,296.73 | 6,055.95 | 8,729.38 | 12,352.68 | 21,233.84 | 42,718.41 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 2,959.88 | 6,510.22 | 8,771.18 | 9,470.10 | 21,313.63 | 43,136.32 | 2,278.46 | 6,055.95 | 8,729.38 | 8,334.41 | 21,233.84 | 42,718.41 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 2,186.69 | 4,846.22 | 6,634.69 | 7,032.91 | 16,051.78 | 32,234.56 | 1,573.50 | 4,484.17 | 6,600.06 | 6,057.67 | 15,985.68 | 31,897.07 |
| 5 | காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானத்தை (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 2,173.00 | 4,848.74 | 6,615.37 | 7,021.74 | 16,025.40 | 32,203.57 | 1,559.81 | 4,486.69 | 6,580.74 | 6,046.50 | 15,959.30 | 31,866.08 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு பங்கு ஒவ்வொன்றும் ரூ.2/–) | 2,467.94 | 2,467.94 | 2,461.06 | 2,467.94 | 2,461.06 | 2,467.94 | 2,467.94 | 2,467.94 | 2,461.06 | 2,467.94 | 2,461.06 | 2,467.94 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | | | | | | | | | | | | |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும்ரூ.2/–) (வருடாந்திரமல்ல) | | | | | | | | | | | | |
| | அடிப்படை | 1.77 | 3.93 | 5.39 | 5.70 | 13.04 | 26.17 | 1.28 | 3.64 | 5.36 | 4.92 | 12.99 | 25.90 |
| | பலமிழந்தது | 1.76 | 3.92 | 5.37 | 5.69 | 12.99 | 26.14 | 1.27 | 3.64 | 5.34 | 4.91 | 12.94 | 25.87 |

குறிப்பு

1) 30 செப்டம்பர் 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரைஆண்டுக்கான ஒருங்கிணைந்த மற்றும் தனியான நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் 7 நவம்பர் 2024 அன்று மதிப்பாய்வு செய்யப்பட்டு,8 நவம்பர் 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

2) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 திருத்தப்பட்டது, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 30 செப்டம்பர், 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரைஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள் அறிக்கையின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. 30 செப்டம்பர், 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரைஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளங்கள் (www.nseindia.com மற்றும் www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளத்தில் (www.archeanchemicals.com) உள்ளது.

3) முந்தைய காலங்கள்/ஆண்டுக்கான புள்ளிவிவரங்கள், தேவைப்படும் இடங்களில் மறுவகைப்படுத்தப்பட்டன.

இடம் : சென்னை
தேதி : நவம்பர் 08, 2024

ஆர்க்கியன் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின்
இயக்குனர்கள் குழு சார்பாக
நிர்வாக இயக்குனர்